**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண். 3/2023**

**இன்**

**அ.வ.எண்.338/2022**

P. பிரபு --- மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

T. விஜயலட்சுமி --- எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது 21.08.2024 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் C. கிரீஸ்கந்தராஜா அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A.R.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

அசல் வழக்கில் வழக்கு கடனுறுதிச்சீட்டில் உள்ள கையெழுத்தையும், மேற்படி மனுதாரர்/பிரதிவாதி மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து நாமாவில் உள்ள கையெழுத்து மற்றும் மனுதாரர்/பிரதிவாதி LIC Sanction Letter – ல் உள்ள மனுதாரர்/பிரதிவாதி கையெழுத்து ஆகியவற்றை ஒரு கைரேகை நிபுணருக்கு அனுப்பி முறைப்படி ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 10–ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் பண வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடனுறுதிச்சீட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை உற்பத்தி செய்து தீய எண்ணத்துடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கடனுறுதிச்சீட்டு எதுவும் எழுதிக்கொடுக்கவுமில்லை. கடன் பெறவும் இல்லை. 14.11.2022 அன்று நீதிமன்றத்தில் அனுமதி பெற்று கடனுறுதிச்சீட்டை பார்வையிட்டபோது அதில் உள்ள கையெழுத்து வித்தியாசமாக இருந்தது தெரியவந்தது. வழக்கு கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பத்தையும், பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வக்காலத்து நாமாவில் உள்ள கையொப்பத்தையும் அவரது LIC Sanction Letter–ல் உள்ள கையொப்பத்தையும் ஒப்பிட்டு பரிசோதனை செய்தால் கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் போலியானது எனத் தெரியவரும். எனவே மேற்சொன்ன ஆவணங்களை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைத்து அறிக்கை பெற உத்தரவிடவேண்டும்.

**3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் பின்வருமாறு:–**

அசல் வழக்கானது பண வசூலுக்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கைத் தாக்கல் செய்யும் முன்பாக 21.06.2022 அன்று பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனைப் பிரதிவாதி 27.06.2022 அன்று பெற்றுக்கொண்டு எவ்வித பதில் அறிவிப்பும் தரவில்லை. அசல் வழக்கில் பிரதிவாதி முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து இ.ம.எண்.3/2023 மனுவை கையெழுத்து நிபுணரின் அறிக்கை பெறுவதற்காக தாக்கல் செய்திருந்தார். அதில் Notice of hearing தாக்கல் செய்யாததால் 30.06.2023 அன்று மேற்படி மனு தள்ளுபடியாகிவிட்டது. காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மேற்படி மனு தள்ளுபடிக்கு விடப்பட்டுள்ளது. அதன்பிறகு

மனுவை ரீ ஸ்டோர் செய்ய இ.ம.எண்.5/2023 தாக்கல் செய்யப்பட்டு, தற்போது இடைமனு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. வழக்கில் காலம் தாழ்த்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடனுறுதிச்சீட்டுத் தேதியின் சமகாலத்தை ஒட்டிய ஆவணங்கள் தாக்கல் செய்து அறிக்கை பெறவேண்டுமே தவிர 2022 ஆம் வருடம் தாக்கல் செய்த வக்காலத்தில் உள்ள கையொப்பத்தையும், 16.06.2018 ஆம் தேதியிட்ட LIC Sanction Letter–ல் உள்ள கையொப்பத்தையும் ஒப்பீடு செய்ய மனுத் தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6. தீர்வு:–</u>

6.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் கடனுறுதிச்சீட்டில் இருப்பது மனுதாரரின் கையொப்பம் அல்ல என்றும், மோசடியாக மனுதாரரின் கையொப்பமிடப்பட்டு கடனுறுதிச்சீட்டானது உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகவும், எனவே LIC Sanction Letter மற்றும் வக்காலத்தில் உள்ள மனுதாரரின் கையொப்பத்தை கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்க்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்பவேண்டுமென்று வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர் தரப்பில் LIC Sanction Letter கடனுறுதிச்சீட்டு தேதிக்கு இரண்டு வருடங்கள் முந்தைய ஆவணம் என்றும், வக்காலத்தானது கடனுறுதிச்சீட்டு தேதிக்கும் இரண்டு வருடம் பிந்தைய ஆவணம் என்றும், கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்ட காலத்தில் இடப்பட்ட மனுதாரரின் கையொப்பம்

அல்லாதவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல என்றும் தெரிவித்து வாதிடப்பட்டது.

6.3. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில், வாதியும், பிரதிவாதியும் உடன்பிறந்தவர்கள் என்றும், வாதி, பிரதிவாதியிடம் வழக்குச் சொத்தை கிரையம் கேட்டு, அதற்கு பிரதிவாதி மறுத்துவிட்டபடியால், மோசடியாக கடனுறுதிச்சீட்டை உற்பத்தி செய்து இவ்வாறான வழக்கை தாக்கல் செய்துள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

6.4. கடனுறுதிச்சீட்டுக்கு இரண்டு வருடங்கள் முந்தைய அல்லது பிந்தைய ஆவணங்கள் என்பது கையொப்பத்தை பெரிய முரண்பாட்டை ஏற்படுத்தாது. இவ்வாறான சூழலில் மனுதாரருக்கு அவர் தரப்பு வழக்கை ஒரு வாய்ப்பு வழங்கவேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, இம்மனுவில் வழக்கறிஞர் திருவாளர். M. காளிமுத்து என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு, அவர் அசல் வழக்கில் உள்ள தாவா கடனுறுதிச்சீட்டு, வக்காலத்து நாமா மற்றும் LIC Sanction Letter ஆகியவற்றை கையெழுத்து நிபுணரின் அறிக்கை பெறுவதற்காக தடவியல் துறைக்கு எடுத்துச் சென்று ஒப்படைத்து தேவையான நடவடிக்கை எடுத்த பிறகு அவற்றைத் திரும்பப் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமென்று ஆணையருக்கு உத்தரவிடப்படுகிறது. தடவியல்துறைக்கு செலுத்தவேண்டிய கட்டணத்தை மனுதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.5,000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி ஆணையர் ஊதியம் ரூ.5,000/– மற்றும் ஆய்வுக் கட்டணம் ரூ.5,000/– ஆகமொத்தம் ரூ.10,000/–ஐ நேரடியாக ஆணையரிடம் உடனடியாக செலுத்த மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது. அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா : 15.11.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.10.14 18:26:02 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>**

**இல்லை**

**எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :**

**இல்லை**

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.10.14 18:26:08 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**